# இலக்க சேமிப்பு: இடர்கள், இலக்குகள், இணைப்புகள்

நா.கண்ணன்
தமிழ் மரபு அறக்கட்டளை

---

கருத்து அறிமுகம்:

கணினிப் பாவிப்பு பரவலாக ஆக அது தரும் பலன் குறித்த கனவுகளும் பரவலாகி வருவது காணக்கிடைக்கிறது. உதாரணமாக, 'ஒளி நகல்' என்னும் தொழில்நுட்பம் 'ஒளி இலக்க நகல்' என்று உருமாறி காகிதம் என்பதைத் தவிர்த்து ஒரு பௌதீகப் பொருளின் நகலை இலக்க வடிவில் நேரடியாகக் கணினியில் சேமித்து, வேண்டிய போது வேண்டிய வடிவில் பாவிக்கலாம் என்று வரும்போது தனி மனிதரிலிருந்து பல்கலைக்கழகம்வரை தங்களிடமுள்ள மரபுப்பொருட்களை இலக்கவடிவில் சேமித்து வைக்கும் ஆசை கொள்ளலாயினர். சில வருடங்களுக்கு முன் சிந்தனையாக இருந்த ஒன்று இன்று திட்டங்களாக மாறி பல்வேறு வடிவமெடுத்திருப்பது கண்கூடாக உள்ளது.. உதாரணங்களாக, மதுரை மின்பதிப்புத்திட்டம் (http://www.projectmadurai.oeg), இணையப் பல்கலைக்கழகம் (http://www.tamilvu.org), இந்திய இலக்க நூலகம் (http://www.dli.gov.in/), தமிழ் மரபு அறக்கட்டளை (http://bharani.dli.ernet.in/thf/index.html), போன்றவை.

இதில் முதற் சொன்ன மூன்று திட்டங்களும் தமிழ் எழுத்தை (e-text) முதன்மையாக மின்னாக்கம் செய்வதில் கருத்தாயுள்ளன. ஆயின் தமிழ் மரபு அறக்கட்டளை, மரபு சார்ந்த ஆவணங்கள் எவ்வடிவில் இருந்தாலும் அவைகளை மின்னாக்கம் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறது. 'புத்தக-லட்சம்' (http://www.archive.org/texts/collection.php?collection=millionbooks) எனும் திட்டம் செயல் வடிவு கொண்டவுடன் அதன் நீட்சியாக இந்திய இலக்க நூலகம் உருவாகிறது, சுவடிகள் சேமிப்பு உள்ள காஞ்சி மடம், அது நடத்தும் சாஸ்திரக் கல்லூரி மற்றும் சில தொழில்நுட்பக் கல்லூரிகள் இத்திட்டத்தில் பங்கேற்கின்றன. தனியார் முயற்சியாக தமிழம்.வணி (www.thamizham.net) , சென்னைவலை.வணி (http://www.chennainetwork.com) , ஈழச் சுவடி (http://www.esuvadi.org) போன்றவை உருவாகியுள்ளன. இது தவிர வணிக இதழ் பதிப்பகத்தார் தங்கள் இதழ்களில் முன்வந்த எழுத்துக்களை மின்பதிப்பாக்கத் தொடங்கியுள்ளனர் (உம். சிஃபி.வணி - மஞ்சரி இதழ் - http://tamil.sify.com/manjari/index.php). இது தவிர குறைந்த அளவில் தனியார் வலைப்பக்கங்களிலும், வலைப்பதிவுகளிலும், தமிழ் மின்னாடற்குழு பிரத்தியேக பக்கங்களிலும் (உம். மரத்தடி - http://www.maraththadi.com/) தமிழ் இலக்கிய மின்பதிவுகள் காணக்கிடைக்கின்றன.

இடர்கள்-பின்னடைவுகள்-பிரச்சினைகள்:

இவையெல்லாம் வரவேற்கப்படவேண்டிய முயற்சிகள். ஆயினும் இம்முயற்சிகள் பற்றிய சேதிகள் இன்னும் பரவலாக தமிழ்மக்களை அடையவில்லை. இத்திட்டங்களில் தமிழர்களின் பங்கேற்பு என்பது மிகக்குறைவாகவே உள்ளது. இன்னும் கணினிப் பாவிப்பு இந்தியத் தமிழர்களிடம் ஆழமாய் பரவவில்லை. அதன் அளப்பரிய பயன் குறித்த சிந்தனைகளும் பரவவில்லை. இதனால் பெரும் அளவில், இத்திட்டங்கள் எதிர்பார்க்கும் அளவில் பொதுமக்களின் பங்கேற்பு என்பது இல்லை. ஆகையால், பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டிய புத்தகங்கள் பரணில் வீணாகப் பூச்சிக்கு இரையாகிக் கொண்டிருக்கின்றன. அமெரிக்க இந்தியரான முனைவர் நா.கணேசன் சமீபத்தில் ஒரு வேண்டுகோள் விடுத்தார், "தமிழில் 6 லட்சம் விருத்தம் அழியும் நிலையில் உள்ளது, படிப்பாரும் சுவைப்பாரும் இன்றி. 3-4 ஆயிரம் பிரபந்தங்கள், 700-1000 தலபுராணம் -

கருத்துக்கள் பழைமை, பௌராணிகம் என்றாலும் எத்தனை அறியாச் சொல்லாட்சி, பொருளாட்சி இருக்கும். அகராதிகளில் ஏற்ற வேண்டியவை எத்தனை? எண்ணிப்பாருங்கள். 1835-1940 வரை அச்சான புஸ்தகங்கள் அப்பளம் போல் நொறுங்கியும், போற்றாமையாலும் அழிபடுகின்றன. கணினி ஒரு வரப்பிரசாதம் ! வருடி அலகிட்டும், தட்டடித்தும், சுவைத்து உரையாடவும், பேணவும் புதுப்பொருள், விஞ்ஞானம் போன்றவற்றைப் பெருக்கவும் உதவுகிறது அன்றோ?" இன்று நிமை இவ்வாறு இருப்பினும் புத்தகங்கள் உள்ளவர்கள் கூடத் துணிந்து தங்கள் புத்தகங்களை இலக்கப் பதிவாக்குவதில்லை. உதாரணமாகப் 'புத்தக-இலட்சம்' திட்டம் எதிர்பார்த்த அளவு, தமிழ்ப் புத்தகங்கள் இலக்கப்பதிவிற்கு வந்து குவியவில்லை. காரணங்கள் பின்வருமாறு :

புத்தக-இலட்சம் திட்டம் பல்கலைக்கழகங்கள் வழியாக நடைபெறுகிறது. காலம் காலமாகப் பல்கலைக்கழகங்கள் பொது நீரோட்டத்தில் கலந்து கொள்ளாமல் ஒரு உயர் மட்டத்தில் தங்களை வைத்துக்கொண்டுள்ளன. இவர்களுக்கும் பொது மக்களுக்கும் உள்ள உறவு தாமரை இலைத்தண்ணீர் போன்றது. எனவே இவர்களை நம்பி பொது மக்கள் தங்கள் புத்தகங்களைத் தருவதில்லை. மேலும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் இதற்காகப் பிரயத்தனப்படுவதுமில்லை. உ.வே.சா போன்று களப்பணி செய்த பேராசிரியர் கூட்டம் வெகுவாகத் தமிழ் மண்ணில் குறைந்துவிட்டது. எல்லோரும் குளிர் பதனப்படுத்தப்பட்ட அறைகளிலிருந்து தமிழாராய்ச்சி செய்யவே ஆசைப்படுகின்றனர்.

அரசு நூலகங்களில் ஆயிரக்கணக்கான ஓலைச் சுவடிகளும், புத்தகங்களும் உள்ளன. ஆனால், அங்குள்ள நூலகக்காப்பாளர்கள் "பூதம் காத்த பொக்கிஷம்" போல் இவைகளை 'இருந்தது, இருந்தபடி' வைத்திருக்கவே ஆசைப்படுகின்றனர். இவையெல்லாம் இலக்கப்பதிவாகி பொது மக்கள் பார்வைக்கு வந்துவிட்டால் எங்கே தங்கள் வேலைக்கே உலை வந்துவிடுமோ என்ற பயமாகவும் இருக்கலாம். இக்கட்டுரை ஆசிரியர் வித்தியாசமான ஒரு உளவியலைக் கண்டு இ-சுவடி மடலாடற்குழுவில் எழுதினார் (http://groups.yahoo.com/group/esuvadi/). அதாவது, பண்டைய ஓலைச் சுவடிகளிலுள்ள இரசவாதச் சூத்திரங்களை வாசித்துவிட்டு, பித்தளையைத் தங்கமாக்கிப் பணக்காரரான வாசகர்கள் உண்டென நம்பி, இந்த நூலகக் காப்பாளர் பல அரிய சுவடிகளை யாருக்கும் வாசிக்கத் தருவதே இல்லை! அதாவது, 'நாய் காத்த வைக்கப்போர்' போல் தனக்கும் உதவாமல். பிறர்க்கும் உதவாமல் இந்த சுவடிகளை இவர்கள் 'பாதுகாத்து' வருகிறார்கள்!

இவர்கள் பொதுவாகத் தரும் சாக்கு, இந்நூலகங்களே அவைகளைப் பதிப்பித்துவிடும் என்பது. அவர்கள் பதிப்பிக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை, ஆயின், அரசு ஊழியர்களுக்கேயுள்ள மெத்தனத்துடன் ஆண்டுகள் பல எடுத்துக் கொண்டு படியெடுத்து, படியெடுத்து (அதாவது ஒரு மேசையிலிருந்து ஒரு மேசைக்கு நகர சில மாதங்கள் என்ற கணக்கில்) இவர்கள் பதிப்பிப்பதற்குள், பதிப்பிக்கப்பட வேண்டிய நூல்கள் பரலோகம் போய்விடுகின்றன! அப்படிப் பதிப்பிக்கப்படும் நூல்களும் மிக மட்டமான தாளில், அசிரத்தையாக மை கசிய பதிப்பிக்கப்பட்டு அப்படிகளைப் பதிப்பித்த சில ஆண்டுகளுக்குள் பாதுகாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளி விடுகிறார்கள்.

இவர்களிடமிருந்து ஒரு நூலை வாங்குவதற்குள் ஆய்வாளன் மனம் தளர்ந்து விடுவதாகப் பேராசிரியை சே.பிரேமா அவர்கள் இக்கட்டுரை ஆசிரியருக்கு அளித்த பேட்டியில் கூறுகிறார் (இப்பேட்டி, தமிழ் மரபு அறக்கட்டளை வெளியிட்டுள்ள 'தமிழகம் கண்ட மருத்துவமுறை' எனும் திகிரி (CD)யில் உள்ளது - http://bharani.dli.ernet.in/thf/SALES/cdprod.html). அரசு அதிகாரிகள் காலம் காலமாக உயர் அதிகாரிகளுக்கு மட்டுமே செவி சாய்ப்பதாக ஒரு பழக்கத்தை (பயம் காரணமாக) ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் இலக்கப்பதிவுத் திட்டங்களுக்கு

அரசின் அதிகாரிகளின் துணையுடனே செல்ல வேண்டியுள்ளது. இவர்கள், ஆய்வாளர், பேராசிரியர்கள் பேச்சைக் கேட்பதில்லை. ஆனால், ஆய்வாளர்களுக்கோ அரசியல் எட்டிக்காய் போல் கசப்பதால் பல நூல்கள் பாதுகாக்கப்படாமல் அழியும் நிலையிலுள்ளன. அரசியல்வாதிகளுக்கோ இம்மாதிரித்திட்டங்களினால் தமக்கு ஆதாயம் அதிகமில்லை என்பதால் கண்டு கொள்வதே இல்லை என்பதும் யதார்த்தம்!

ஆனால், அரசு நூலகங்களில் புதிய புத்தகங்கள் வரும் போது பழைய புத்தகங்களை வைப்பதற்கு இடமில்லையென்று அவைகளை எரித்துவிடுவதாகப் பத்திரிக்கைச் சேதிகளைக் கண்ணுறும் போது கண்ணீர் சிந்தாமல் இருக்க முடிவதில்லை! இதே போல், அரசு சார்ந்த வானொலி நிலையங்களில் பழைய ஒலிநாடாக்கள் அழிக்கப்படுவதால் மிக அரிய அறிஞர் உரைகள் மீண்டும் கேட்கமுடியா வண்ணம் அழிந்துவிடுவதாக சிட்டி சிந்தரராஜன் அவர்கள் ‘கண்டெடுத்த கருவூலங்கள்’ எனும் புத்தகத்தில் குறிப்பிடுகின்றார்.

சரி, தனியார் நூலகங்களைப் பாதுகாக்கலாமெனப் புறப்பட்டால் வேறு மாதிரியான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக, தனியார் நூலகங்கள் தனிப்பட்ட உழைப்பில் கட்டமைக்கப்படுபவை. அவர்கள் ஆண்டாண்டு காலமாக உழைத்து சேகரித்ததை ஒரு எளிய தொழில் நுட்பத்திற்குப் பரிசாக அளிக்க விரும்புவதில்லை. அவர்களுக்கு ஈட்டுத்தொகை வழங்கி இலக்கப்பதிவாக்கும் நிலையில் இப்போதுள்ள திட்டங்கள் நிதி வசதியுடன் இல்லை. உதாரணமாக, அடையாறிலுள்ள உ.வே.சா நூலகத்தை நவீனப்படுத்தி இலக்கப்பதிவாக்க 45 இலட்சம் ரூபாய் ஆகுமென்று நூலகப் பாதுகாவலர் இக்கட்டுரை ஆசிரியருக்குச் சொன்னார்கள். இத்தகைய காரணங்களால் தனியார் நூலக நூல்களும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன.

நூலகமென்று வைக்கும் அளவிற்கு இல்லையெனினும் பல நபர்கள் பல அரிய நூல்களைச் சேகரித்து வைத்துள்ளனர். அவைகளை நல்ல விலைக்கு விற்க வேண்டுமென்பதே இவர்கள் அவா. எனவே இத்தகைய நூற்களை இலக்கப்பதிவாக்க வேண்டுமென்றால் நமது திட்டத்தில் இதற்கென தனி நிதி ஒதுக்கீடு அவசியம். பாரதியாரின் எழுத்து பொதுவுடமையான பின்பும், அவரின் எழுத்தைச் சேகரித்து வைத்து கொஞ்சம், கொஞ்சமாகப் பதிப்பித்து வரும் ஒரு சேகரிப்பாளரை இக்கட்டுரை ஆசிரியர் அணுகிய போது அவர் போட்டோ எடுக்கக்கூட அனுமதிக்கவில்லை. காரணம், பாரதியின் எழுத்து பாரதிக்குச் சோறு போட்டதோ என்னவோ! இவருக்குச் சோறு போடுகிறது. எனவே அவைகளை இலக்கப்பதிவாக்க இவர் விரும்பவில்லை. இம்மாதிரிப் போக்கினால் அடுக்கில் சேகரமான பழைய புத்தகங்கள் அழியும் நிலைக்கு தள்ளப்படுகின்றன.

இதே போன்றதுதான், வெளிநாட்டு நூலகங்களிலிருக்கும் நமது புத்தகங்களை இலக்கமயமாக்கும் முயற்சியும். உதாரணமாக, இலண்டனில் உள்ள பிரித்தானிய நூலகத்திலிருந்து ஒரு நூலைப் பதிவாக்கக் கீழ்க்காணும் செலவினங்களுண்டு: அ) நேரடிக் கைப்பதிவு. அதாவது கணினியில் தட்டச்சுமுறையில் நூலகத்தில் அமர்ந்து பதிவது. நூல் இலவசம். ஆனால் பதிவுக் கூலிக்குச் செலவு அதிகம். இதற்கென ஒருவரை வேலைக்கு வைக்கவோ அல்லது ஒரு ஆய்வாளருக்கு உதவித்தொகை வழங்கவோ நிதி வைத்துக்கொள்வது அவசியம். அப்படி இல்லையெனில், ஆ) கருப்பு/வெளுப்பு ஒளி நகலுக்கு ஒரு கட்டணம்; மூலத்தின் நிறத்துடன் ஒளி-இலக்கப்பதிவாக்க: குறைந்த தெளிவு, நடுத்தரத்தெளிவு, மிகத்துல்லிய பதிவென ஒவ்வொன்றிற்கும் ஒரு கட்டணமுண்டு. இதைக் கொடுப்பதற்கு நமது திட்டத்தில் பண வசதி இருக்க வேண்டும்.

ஐரோப்பா முழுவதுமுள்ள பல்வேறு நூலகங்களில் தமிழ்ச்சுவடிகளும், புத்தகங்களுமுள்ளன. அவையெல்லாம் முறையாகப் பதிவாகப் பல மில்லியன் டாலர் செலவாகும். அதற்காக மெகாத்திட்டங்களை நாம் இனிமேல்தான் வரைய வேண்டும்!

தமிழகப் பல்கலைக் கழகங்கள் இலக்கத் தொழில் நுட்பங்களைப் பற்றி அதிகமாக அலட்டிக் கொள்வதில்லை போல் தோன்றுகிறது. ஏனெனில், அவர்கள் மத்திய, மாநில நிதி உதவியுடன் இத்தகைய ஆய்வுத்திட்டங்களைச் செயல் படுத்தலாம். சமீபத்தில் சென்னைப் பல்கலைக்கழகம் மத்திய அரசின் நிதியுதவியுடன் மருத்துவ நூல்களை இலக்கப்பதிவாக்கப் போவதாக ஒரு செய்தி வந்துள்ளது (http://groups.yahoo.com/group/esuvadi/message/4497). அதேபோல், திருப்பதிப் பல்கலைக்கழகமும் புத்தக-இலட்சம் திட்டத்துடன் இணைந்து சென்னையில் ஒரு நூல் சேகரிப்பு மையமொன்றை நிறுவியிருப்பதாகச் செய்தி வந்துள்ளது. (http://groups.yahoo.com/group/esuvadi/message/4450). ஆனால், தமிழ்ப் பல்கலைக்கழகமோ, மதுரைப் பல்கலைக்கழகமோ இதில் இன்னும் ஈடுபடாதது ஆச்சிரியம்!

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் 'மதுரைத்திட்டத்தின்' நூல்களைப் பயன்படுத்திக்கொள்வதாக ஆரம்பித்து நூல்களில் அச்சுப்பிழைகள் உள்ளன என்று கூறி அனைத்து நூல்களையும் மீண்டும் அச்சேற்றும் வேலையில் ஈடுபட்டுள்ளது. இது எவ்வளவு கால விரயம் என்பது புரியும். அதற்குப் பதில் தேர்ந்த தமிழ் அறிஞர்களிடமோ, அச்சகங்களில் வேலை செய்த அநுபவம் உள்ளவர்களிடமோ கொடுத்து பிழை திருத்தி வெளியிட்டிருக்கலாம்.

பிழையற்ற பதிப்பு என்பது ஒரு பிரச்சினைதான். மதுரைத்திட்டம் போன்ற தொண்டூழியத்தை நம்பி இயங்கும் திட்டங்களில் 100% பிழையற்ற பதிப்புகளை எதிர்பார்க்க முடியாது. காரணம், தட்டச்சு செய்பவர் தமிழுக்குச் சம்பந்தமில்லாத ஏதாவதொரு வேலையில், வெளிநாட்டில் இருப்பார். தமிழைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஒரே உந்துதல் காரணமாகத் தட்டச்சு செய்வார். அவருக்குக் கிடைத்திருக்கும் புத்தகத்திலேயே பிழைகள் இருக்க வாய்ப்புள்ளது. பின் அவர் சேர்க்கும் பிழைகள் வேறு! இணைய உலகில் சுயநலமற்று தட்டச்சு செய்பவர் அரிது. அதைவிட அரிது அதைப்பிழை திருத்துவோர்!

இணையப் பரப்பில் தமிழறிந்த அறிஞர்கள் இல்லாமல் இல்லை. ஆனால், அவர்கள் எல்லோரும் தனித்தனித் தீவாகச் செயல்படுகின்றனர். அவரவர் சேகரிப்பு அவரவர்க்கு என்று. அவர்கள் சேகரங்களைப் பொதுவான இடத்தில் வைக்கும் அளவிற்கு அவர்கள் 'கீழிறங்கி' வருவதில்லை அல்லது இருக்கும் திட்டங்களுடன் தங்களை இணைத்துக் கொள்வதில்லை. இது பொது இழப்பிற்கு வழியிடுகிறது! வீர வணக்கம் (ஹீரோ ஒர்ஷிப்) என்பதை ஒரு மரபாகக்கொண்ட தமிழர் வாழ்வியலில் பல திட்டங்கள் இம்மாதிரி வீரவணக்கத் திட்டங்களாக, தனித்தீவுகளாக அமைந்து வருவதையும் காண முடிகிறது. 'என் வழி தனி வழி' என்பது சினிமா வசனமாக இருந்தாலும் அது தமிழர் உளவியலை மிகச்சரியாகப் பிரதிபலிப்பதாக உள்ளது.

தமிழ் ஆர்வமுள்ள பிறதுறை சார்ந்தவர்கள், உதாரணமாக, திருக்குறளையே மீண்டும், மீண்டும் பதிப்பிக்கின்றனர். சென்ற தமிழிணைய மாநாட்டில் எழுத்தாளர் சுஜாதா அவர்கள் திருக்குறள் மட்டும் இணையத்தில் குறைந்தது 40 படிகளாவது இருக்குமென்றார். பிரபலமானவையே மீண்டும், மீண்டும் பிரபலமடைகின்றன அல்லது கண்ணில்படுகின்றன என்பது பொதுவிதியாயினும் சேமிப்பிற்கு ஏங்கி நிற்கும் பாதுகாப்பற்ற பல நூல்கள் இன்னும் பல்லாயிரமுண்டு.

தமிழகத்திலிருக்கும் பல்வேறு நூலகங்களிலுள்ள புத்தகங்கள் என்று, யாரால் மின்னாக்கம் பெறும்? அவைகள் தமிழ் மரபு அறக்கட்டளை போன்ற தன்னார்வச் சங்கங்களுக்கு மின்னாக்க இடம் தருமா? அனுமதி கிடைக்குமா? இது தவிர தமிழ் அறிஞர்களின் நூற்சேர்புகள் கொண்ட

நூலகங்களை யார் மின்பதிப்பு செய்வது? எவ்வாறு? அவைகளை முறையாகப் பதிப்பிக்க இந்திய மத்திய அரசின் நிதி பெற்றுச் செயல்படும் பல்கலைக்கழகத் துறைகள் என்ன செய்யவுள்ளன? தமிழக அரசின் நிதியில் இயங்கும் இணையப்பல்கலைக்கழகம் என்ன செய்யவுள்ளது? தமிழ் மீது ஆர்வமுள்ள பிற நாட்டு நூலகத்துறைகள் என்ன செய்யவுள்ளன (குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர்)?

இத்தகைய திட்டங்களுக்கான ஒரு பொது நிதி உருவாக்கவியலுமா? திட்டமிட்ட வடிவம், இலக்கு, முடிவு தேதிகள், இணைப்பு என்று அங்கு பலரால் செயல்பட முடியுமா? அவை ஏன் என்று மனம் திறந்து பேச வேண்டிய ஒரு காலகட்டத்தில் இருக்கிறோம்.

இணையம் என்பது இணைக்கும் ஊடகம், தொடர்புபடுத்தும் ஊடகமென்றாலும் பலதிட்டங்களுக்குள் ஒரு ஆழமான தொடர்பு இல்லை. இதில் பல திட்டங்கள் தமிழ் இணைய மாநாடுகள் மூலம் பிரபலமடைந்திருப்பதால் இது குறித்த ஒரு 'சாலை வரைபடம்' இம்மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டியது அவசியமென்று தோன்றுகிறது. எனவே திட்டமிட்ட இலக்கை இத்திட்டங்கள் எதுவும் குறித்த காலகட்டத்தில் அடைந்துள்ளதாகக் கூறமுடியாது. ஒவ்வொரு திட்டமும் ஆரம்பிக்கும் காலத்தில் பெருத்த வரவேற்பையும், எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தாலும் அவை செயல்படத் தொடங்கிய பின் ஒரு தொய்வு நிலையை அடைகின்றன. ஒருங்கிணைப்பு என்பது இம்மாதிரித் திட்டங்களின் அகவமைப்பில் ஒரு அங்கமா? என்பதும் கேட்கப்பட வேண்டிய கேள்வி.

இலக்குகள்:

இலக்கத் தொழில் நுட்பம் அறிந்த அனைவரும் ஒத்துக்கொள்வது, தமிழ்ப் பாரம்பரியப் பாதுகாப்பிற்கு இத்தொழில் நுட்பம் ஒரு வரப்பிரசாதமென்பதாகும். எனவேதான் விவரமறிந்தவர்கள் தனியாகவோ, குழுவாகச் சேர்ந்தோ அல்லது நிறுவனம் மூலமாகவோ தமிழ்ப் பண்பாட்டு முதுசொமைப் பாதுகாக்க முனைந்துள்ளனர். இலக்கு தெளிவாக இருக்கிறது, ஆனால் நிறைய நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. அவைகளைக் களையும் முறை பற்றி ஒரு மனம் திறந்த கலந்துரையாடல் அவசியம். இதற்கென ஒரு கூடலையோ, கருத்தரங்கையோ தமிழ்நாட்டிலோ, வெளிநாட்டிலோ பல்கலைகழகச் சார்புடனோ அல்லது உத்தமம் வழியாகவோ நடத்த வேண்டும். இணையத்தளத்தில் இதற்கென ஒரு இயக்கம் உருவாகியுள்ளது. தமிழ் மின்னூலகங்களுக்கான வலைப்பின்னல் என்பதே அது Tamil Digital Library Network (TADILNET) http://bharani.dli.ernet.in/tadilnet/. இது உத்தமத்தின் துணையுடன் செயல்படத் தொடங்கியுள்ளது. இதன் வளர்ச்சி, தமிழ் முதுசொம் இலக்கப்பதிவின் வளர்ச்சியாக ஆவதற்கு வாய்ப்புள்ளது.

தமிழ் முதுசொம் மின்வெளியில் நிரந்தரப்பாதுகாப்பில் இருக்க வேண்டி கீழ்க்காணும் முன்வரைவுகளை முன்வைக்கலாம்:

முதலில் தோன்றிய தமிழ் இணையப்பல்கலைக் கழகம், அதன் பின் தோன்றிய தமிழ் மரபு அறக்கட்டளை, புதிதாகத் தோன்றியுள்ள இந்திய இலக்க நூலகம் ஆகியவை நோக்கில் ஒன்று பட்டு இருப்பதால் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவற்றில் ஒன்று மாநில அரசு, ஒன்று மத்திய அரசு சார்ந்த நிறுவனம். மற்றது ஈட்டுமுனைப்பற்ற பொது நிறுவனம். இவை அனைத்தும் சேர்ந்து செயல்பட்டால் அது நாட்டிற்கே முன்னுதாரணமாகப்படும்.

தமிழ் நாட்டில் நூற்றுக்கும் மேலான கல்லூரிகள் உள்ளன. பொதுவாக எல்லாக்கல்லூரிகளிலும் கணினி வசதி வந்துவிட்டது. இக்கல்லூரிகளிலுள்ள தமிழ்த்துறையும், கணினித்துறையும் சேர்ந்து

செயல் பட்டு தொண்டூழியத்தில், தமிழில் ஈடுபாடுள்ள மாணவர்களுக்கு முறையான இலக்கப்பதிவு செய்யும் முறைகளைக கற்றுத்தர வேண்டும். இதற்கான பயிற்சியை மேலே சொன்ன மூன்று நிறுவனங்களும் அளிக்கலாம். இப்படிப் பதிப்பிக்கப்படும் நூல்களை பிழைதிருத்தம் செய்ய கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்கள் முன்வரவேண்டும். எல்லாம் ஆங்கிலப்படுத்தப்பட்டுவரும் தமிழகத்தில்-60 களில் காணப்பட்ட அபரிதமான தமிழ் உணர்ச்சியை- தமிழ் மாணவர்களுக்கு மீண்டும் ஊட்ட இம்மாதிரி முயற்சிகள் துணை போகும். இதில் கணினி வசதியுள்ள பள்ளிகளையும் சேர்த்துக் கொள்ளலாம். அமெரிக்காவில் நடந்த தமிழிணைய மாநாட்டில் 50,000 பள்ளிகளுக்கு கணினி வசதி செய்யப்போவதாக ஒரு திட்டம் முன் வைக்கப்பட்டது. அம்மாதிரி கணினி வசதியைப் பள்ளிக்குத் தரும் போது ஒவ்வொரு பள்ளியும் குறைந்தது 100 புத்தகங்களையாவது இலக்கப்பதிவாக்கித்தர வேண்டும் என்ற அன்புக் கட்டளையை வைக்கலாம். இப்படிப் பதிவாகும் நூற்களை இணையத்தில் வைத்து பராமரிக்க மேற்சொன்ன மூன்று நிறுவனங்களும் முன்வரலாம்.

தனியார் வணிக நிறுவனங்கள் தமிழிணைய மாநாட்டில் தொடர்ந்து பங்கேற்றாலும் தங்களது வலைப்பக்கங்களில் இம்மாதிரியான சமூகப் பொறுப்புள்ள திட்டங்களுக்கு ஒரு இணைப்பு கூடத்தருவதில்லை. இணைப்பு என்பதுதான் இணையத்தின் அடிக்கோடு. ஆனால் 'சேதி' என்பதை விலைக்கு விற்று வரும் பழக்கம் இன்னும் மக்கள் மனதிலிருந்து அகலாத காரணத்தால் இணைப்புக் கொடுப்பது பண இழப்பு என்பது போன்றதோர் மனோநிலை இவ்வணிக நிறுவனங்களுக்கு இருப்பதாகப்படுகிறது. இது மாறி, இத்திட்டங்களை பிரபலப்படுத்துவதில் இணைய இதழ்கள் முன்னிற்க வேண்டும். வெறும் கிசு,கிசுப்பு, சுயபுராணம் பாடும் மடலாடற்குழுக்களுக்கு இணைப்புத்தர உடனே முன்வரும் இதழ்கள், சமூகப்பொறுப்புள்ள திட்டங்களைக் கண்டு கொள்ளாமல் விடுவது ஆரோக்கியமற்ற போக்கையே சுட்டுகிறது.

சுயநலமற்ற திட்டங்களுடன் செயல்படும் பொறுப்புள்ள கூட்டமொன்று உருவாக வேண்டும். எல்லோரும் பின் பெஞ்சில் அமர்ந்து கொண்டு என்ன நடக்கிறது? பார்க்கலாம் என்ற மனோநிலையிலேயே இருக்கிறார்கள். நான்கு பேர் சேர்ந்து ஒரு தேரை இழுப்பதற்கும், நாலாயிரம் பேர் சேர்ந்து இழுப்பதற்கும் நிறைய வித்தியாசமுண்டு. அதிகம் சாதிக்கவில்லை என்று வக்கணையாக முறையிடுவதைத் தவிர்த்து சாதனை என்பது கூட்டு முயற்சியால் மட்டுமே நிகழும் ஒன்று என்று எண்ண வேண்டும்.

தமிழ் மரபு அறக்கட்டளை போன்ற நிறுவனங்கள் பொது நிதியை நம்பி இருப்பவை. உலகமெங்கும் பரவியிருக்கும் தமிழ் கூறும் நல்லுகம் நிதியுதவி செய்ய வேண்டும். மலேசியா-சிங்கப்பூர் அரசுகள் முன்வந்து ஆதரவு தர வேண்டும். மேலும் இம்மாநாட்டில், இம்மாதிரித்திட்டங்களுக்கான ஒரு பொது நிதியை உருவாக்கும் முனைப்பு பற்றிச் சிந்திக்க வேண்டும். இருக்கின்ற நிதியைப் பகிர்ந்து கொள்ளும் வழியையும் கண்டறிய வேண்டும்.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள், நூலகங்கள், பிற மரபு சார் நிறுவனங்களுடன் சேர்ந்து செயல்படும் முன்வரைவு ஒன்றைப் பற்றியும் சிந்திக்கலாம்.

மிக முக்கிய வளச்சேர்ப்பு என்றால் அது மனித வளச்சேர்ப்பே! எனவே தொழில்நுட்பமறிந்த தமிழர்கள், பிறநாட்டினர் இந்நூலக வளர்ச்சியில் பங்கேற்க வேண்டும். உதாரணமாக சேமிப்புக்களை எப்படிச் செந்தரமாக்குவது? அட்டவணைப்படுத்துவது? சேகரிப்பிலுள்ள விஷ யங்களை எப்படி எளிதாகத் தேடி எடுப்பது போன்றவை நாம் கொள்ளும் சவால்கள். இதற்கான ஒரு மூளை வங்கி காலத்தின் தேவை.

முடிந்தால் கூகுள், மைக்ரோ சாஃப்ட் இவைகளுடன் நட்புறவை ஏற்படுத்தி நமது சேகரிப்பை உலகமயமாக்க முடியுமாவெனவும் சிந்திக்க வேண்டும்.

பெரும்பாலான தமிழர்களுக்கு இம்மாதிரித்திட்டங்களை உலகமயமாக்குவதில் ஒரு தயக்கம் உள்ளது. அது காரணமில்லாத தயக்கமில்லை. அது என்னவெனில், நம்மவர் பல்லாண்டு அனுபவத்தில் பெற்ற அறிவை பொதுவில் வைக்கும் போது மற்றவர் (பிற நாட்டவர்) அவ்வறிவு கொண்டு தொழில்முறையில் ஆதாயம் பெற்றுவிட முடியாதா? என்பதே! இது ஒரு வகையில் அறிவுக்காப்புரிமை பற்றியது. உண்மையில், நமது அறிவுச் செல்வங்களை இணையத்தில் வைப்பதின் மூலமே நமது இந்தியக் கண்டுபிடிப்புகளுக்குக் காப்புரிமை வழங்கவியலும்! உதாரணமாக, மஞ்சள் கிழங்கைப் பல்லாயிரமாண்டு நாம் பயன்படுத்தி வந்தாலும் அது பற்றிய நூற்குறிப்பை நாம் சுவடிகளிலிருந்து எடுத்து இணையத்தில் வெளியிடும் போது மஞ்சள் பயன்பாட்டின் இந்தியக்கண்டுபிடிப்பு காப்புரிமை பெறுகிறது. மேலும் சுவடிகள் வெளியிடப்பட்டவுடன் அதுகுறித்த ஒரு உலகம் சார்ந்த கருத்துப்பரிவர்த்தனை இடம் பெற வேண்டும். சுவடி வாசிக்கத் தெரிந்த தமிழர்கள் உடனே அச்சுவடிச் செய்திகளை நவீன தமிழில் மாற்றித் தரவேண்டும். அவை, உடனுக்குடன் ஆங்கில மற்றும் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் அப்போதுதான் நமது சிந்தனைகளுக்குக் காப்புரிமை கிட்டும். இது குறித்த ஒரு கலந்துரையாடல் கூட 2004 தமிழிணைய மாநாட்டில் இடம் பெற வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் பங்கேற்பதுடன் தமிழ் மரபு அறக்கட்டளை மற்றும் பிற திட்டங்களின் சேகரிப்பை ஆக்கமுறையில் பயன்படுத்தவும் முன்வரவேண்டும். உதாரணமாக, சான்பிரான்சிஸ்கோவில் நடந்த மாநாட்டில் மாணவர்களுக்கான ஒரு தமிழறிவுப் போட்டியில் எமது சேகரிப்புகளை 'இணையவளம்' (internet resource) என்று குறிப்பிட்டு மாணவர்களை இவ்வளத்தைப் பயன்படுத்துமாறு செய்தனர். இதே முறையில் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள், பிற மாநில, பிற நாட்டு தமிழ்த்துறைகள் இவ்வளத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதை ஊக்குவிக்கும் வண்ணம் மலேசியப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையுடன் எமது அறக்கட்டளை பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் இவ்வளப்பயன்பாட்டில் ஊக்கமுடன் ஈடுபடவேண்டும்.

இதற்கான முன்வரைவாகச் சென்ற மாநாட்டுக்கட்டுரைகளில் கட்டுரை வாசிக்கப்பட்டுள்ளது.அவை பின்வருவன :

1) சேகரிப்பிலுள்ள நூல்களை மாணவர்கள்/ஆசிரியர்களை வாசிக்க ஊக்குவித்தல்,
2) அது குறித்த ஒரு அறிவு பூர்வமான கலந்துரையாடலை 'இ-சுவடி' போன்ற இணைய மன்றத்தில் வைப்பது,
3) தொடர்ந்து கூட்டமைப்பாகச் செயல்பட 'வலைப்பதிவு' தொழில் நுட்பத்தைப்பயன்படுத்துவது (http://our_legacy.pitas.com/) ஆகியவையாகும்.

தமிழ் மரபு அறக்கட்டளையின் தொடர் வளர்ச்சி:

தமிழ் மரபு அறக்கட்டளை கோலாலம்பூரில் நடந்த தமிழிணைய மாநாட்டில் துவக்கப்பட்டது. அம்மாநாட்டில் முன்வைக்கப்பட்ட ஒரு கட்டுரையின் பின்விளைவாகவே இத்திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. அம்மாநாட்டில், அறக்கட்டளைக்கான விதைக்காசு தரப்பட்டு, அது தொடர்ந்து மலேசிய இந்தியக் காங்கிரஸால் பேணப்படும் என்று பத்திரிகைகளில் செய்தி வெளியாகியது. அது தந்த உத்வேகத்தில் தமிழ்மரபு அறக்கட்டளை இன்றுவரை ஊக்கமாகச் செயல்பட்டு வருகிறது. தனது தொழில்முறை வேலைகளுக்கிடையே இக்கட்டுரை ஆசிரியர் இதற்காக நேரம் ஒதுக்கி பலமுறை இந்தியாவில் களப்பணி செய்துள்ளார். இக்களப்பணியில் நூல் சேகரிப்பு என்பது முக்கிய நோக்கமாக இருந்தாலும், இத்திட்டத்தைப் பொது மக்களிடம்

எடுத்துச் செல்ல தொலைக்காட்சிப் பேட்டிகள், வானொலிப் பேச்சுகள், இதழ்களில் கட்டுரைகள் என்று பல அளித்துள்ளார். அது மட்டுமின்றி ஒவ்வொரு முறையும் தனியார் நூலகங்களுக்குச் சென்று அவர்களது ஆதரவை வேண்டியிருக்கிறார். இதுவரை சந்திந்த தனியார் நூலகங்கள் எல்லாமே இலக்கப்பதிவிற்கு ஒப்புதல் அளித்துள்ளன. அதற்கான ஆள் பலம், நிதி பலம் ஆகியவற்றை வரும் ஆண்டுகளில் திரட்ட வேண்டும். தமிழ் மரபு அறக்கட்டளை தனது சேகரிப்புகளைக் கீழ்க்காணும் பகுதிகளில் மின்வடிவாக வைத்திருக்கிறது:

மின் நூல்
 http://www.tamil-heritage.org/ebook.html;
 http://bharani.dli.ernet.in/thf/text/text.htm
இலத்திரன் சுவடிகள் (இ-சுவடி)
 http://bharani.dli.ernet.in/thf/palmleaf/plindex.htm
 http://www.tamil-heritage.org/photoarc/olai/olainaya.html
தமிழ் முதுசொம் களஞ்சியம்
 http://www.tamil-heritage.org/monument/oodu/sangkam.html
தமிழ் புகைப்படக் களஞ்சியம்
 http://www.tamil-heritage.org/photoarc/fotogall.html
தமிழ் ஓவியக்களஞ்சியம்
 http://www.tamil-heritage.org/art/artist.html
தமிழ் வரிவடிவப் பரிணாமம்
 http://www.tamil-heritage.org/tamievol.html
முதுசொம் இசையரங்கம்
 http://bharani.dli.ernet.in/thf/audio/luvmusic.html
முதுசொம் ஒளியரங்கம்
 http://bharani.dli.ernet.in/thf/video/moindex.html

இலண்டன் வாழ் தமிழர்களின் ஆதரவுடன் இலண்டன் கிளையொன்று ஆரம்பிக்கப்பட்டு பிரித்தானிய நூலகத்தைச் சார்ந்த ‘இந்திய அலுவலகம்’ சேகரிப்புகளை மின்னாக்கம் செய்யத் தொடங்கியுள்ளது. ஆங்கிலக் குடியரசில் இதுவே முதன்முறையாக ஒரு இனம் தனது பாரம்பரியச் சொத்துக்களை இலக்கவடிவில் சேகரிக்கும் செயலாகும். இதை மிகுந்த உற்சாகத்துடன் பிரித்தானிய நூலகம் கண்காணித்து வருகிறது. இத்திட்டம் வெற்றி பெறும் போது ஆங்கிலக் குடியரசில் வாழும் பிற இன மக்களை ஊக்குவிக்க தமிழ் மரபு அறக்கட்டளையின் தமிழ் மின்னாக்கத்திட்டம் முன் உதாரணமாகக் காட்டப்படும். தமிழ் இனம் இதில் முன் நிற்பது நமக்குப் பெருமையளிக்கும் விஷயமாகும்.

இக்கட்டுரை ஆசிரியர் பாரதக் குடியரசுத்தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்களைச் சந்தித்ததாலும், ‘புத்தக-இலட்சம்’ இந்தியத்துறைத்தலைவர் பேராசிரியர் பாலகிருஷ்ணனைச் சந்தித்ததாலும் தமிழ் மரபு அறக்கட்டளைக்கு இந்திய இலக்க நூலகத்தில் நிரந்தர இடம் கிடைத்துள்ளது. இனிவரும் ஆகப்பெரிய சேகரிப்புகள்
 http://bharani.dli.ernet.in/thf/index.html
என்ற இணையத்தளத்தில் பொது மக்கள் நுகர்விற்கு வைக்கப்படும்.

தமிழ்மரபு அறக்கட்டளை பரிட்சார்தயமாக மின்னுலகில் (cyberspace) இதுவரை இயங்கி வந்தாலும் இந்த ஆண்டு (2004) கோடை முதல் இந்தியாவில் பதிவு பெற்ற சங்கமாக உருவாகியிருக்கிறது. இதன் முதல் செயற்குழுவில் உலகம் தழுவிய முறையில் பல தமிழ் அறிஞர்கள் இடம் பெற்றுள்ளனர்.

http://www.tamil-heritage.org/ec/ec.html

அடுத்த திட்டமாகத் தமிழ் கூறும் நல்லுகிலும், பிற நாட்டிலும் வாழும் அறிஞர்கள் கொண்ட ஒரு குழு உருவாகவுள்ளது. இக்குழுவின் ஆலோசனையுடன் இனிவரும் காலங்களில் தமிழ் மரபு அறக்கட்டளை செயல்படும்.

மின்னிட நெருக்கடியால் மின்னாக்கம் பெற்ற பல நூற்கள் இன்னும் இணையத்தில் வலையேற்றம் பெறாமல் இருந்து வந்தன. இனிவரும் காலங்களில் அவையெல்லாம் இந்திய இலக்க நூலக வலைத்தளத்தில் வலையேற்றம் காணும்.

தமிழ் மரபு அறக்கட்டளை மூன்றாண்டுக் காலத்தில் மிகக்குறுகிய மனித வளத்துடன் மிகக்குறுகிய பொருள் வளத்துடன் இவைகளைச் சாதித்து இருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் உணர்வுடைய பலர் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகின்றனர். தமிழ் இணைய மாநாடு நமது சங்கமாக இருக்கிறது. இங்கு வருபவர் ஆதரவு தொடர்ந்து இருந்து வருகிறது. உத்தமம் தொடர்ந்து நம்முடன் தோழமையுடன் அனுகூலமாக இருக்கிறது.

இனி வரும் காலங்களில் நாம் எப்படி நமது இலக்கை நோக்கி நடை போடப் போகிறோம்? மக்களிடம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை எப்படிச் சமாளிக்கப் போகிறோம், மனித வளத் தேக்கத்தை எப்படி எதிர் கொள்ளப் போகிறோம்?, தொழில் நுட்ப அறியாமை/போதாமை இவைகளை எப்படிச் சமாளிக்கப் போகிறோம்? தொடர்ந்து செயல்பட பொருள் வளத்தை எப்படிக் கூட்டப்போகிறோம்? இவையெல்லாம் நம் முன்னே நிற்கும் கேள்விகள். கேள்விகள் அசௌகர்யமானவை என்றாலும், கேள்விகளின்றி முன்னேற்றமென்பது இல்லை. இப்போதுள்ள இணைய வளங்களை எப்படிப் பேணுவது, பகிர்வது. நாளைய சவால்களுக்கு இப்போதே திட்டமிடுவது. நாளைய ஒருங்கிணைப்பிற்கான சாலையை இன்றே போட ஆரம்பிப்பது என்பதே இக்கட்டுரை ஆசிரியர் தமிழிணைய மாநாட்டில் பலரின் பங்களிப்புடன் ஆலோசிக்க உள்ளது.

Dr.Narayanan Kannan
Korea Ocean Research & Development Institute
South Sea Institute, 391, Jangmok-Myun Geoje-Shi, 656-830,
Korea